# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : CC.No. 693/2024
## வழக்கு சாட்சி PW-4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நிறைகுளத்தான் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 10th, 2025.

**(4, 5, 6, 8 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

முதல் விசாரணை :

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு 200ம் ஆண்டில் நான் அந்த கையெழுத்தை வைகுண்டமணி வீட்டில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.11 18:11:13 +0530